21.5.2023

**ஊடக வெளியீடு**
Ir. பத்மநாதன் K.
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹெோல்டிங் பெர்ஹாட்
மற்றும் PBAPP.

**2023 பினாங்கு நீர் எச்சரிக்கை 4: ஆயர் ஈத்தாம் நீர் நெருக்கடியைத் தவிர்க்கும் போராட்டத்தை PBAPP கைவிடாது**

- **19.5.2023 அன்று 2,160 மில்லியன் லிட்டர்(ML) ஆயர் ஈத்தாம் அணையின் பயனுள்ள கொள்ளளவு 41.5% ஆகக் குறைந்துள்ளது.**
- **PBAPP இந்த அணையில் இருந்து தினசரி எடுக்கப்படும் அளவுகளை ஒரு நாளைக்கு 22 மில்லியன் லிட்டரில் இருந்து (MLD) மே மாதத்தில் 15 MLD ஆகக் குறைத்துள்ளது. நீர் வெளியீடு மேலும் குறைக்கப்படலாம்.**

பினாங்கு, ஞாயிறு, 21.5.2023: 2023,மே மாதம், பினாங்கு நீர் விநியோகம் சென் பெர்ஹாட் (PBAPP) ஆயர் ஈத்தாம் அணையிலிருந்து ஒரு நாளைக்கு 22 மில்லியன் லிட்டர்(MLD) இருந்து 15 MLD ஆகக் குறைத்துள்ளது. 2023,ஜூன் இல், அணையின் எஞ்சியிருக்கும் மூல நீர் இருப்பைப் பாதுகாக்க தினசரி நீர் வெளியீடு மேலும் குறைக்கப்படலாம்.

ஆயர் ஈத்தாம் அணையின் பயனுள்ள கொள்ளளவு 30%க்கும் கீழே குறையும் போது, PBAPP தினசரி நீர் வெளியீடுகளை 10 MLD முதல் 12 MLD வரை குறைக்கலாம். அணையின் மீதமுள்ள மூல நீர் இருப்பு 2023,செப்டம்பர் வரை நீடிக்க இதுவே சிறந்த வழியாகும்.

ஆயினும்கூட, PBAPP அவசரமாக ஆயர் ஈத்தாம் பகுதியில் உள்ள நீர் பயனீட்டாளர்களின் ஒத்துழைப்பைக் கேட்டு அவர்களின் நீர்ப் பயன்பாட்டைக் குறைக்கிறது. இது "பாதுகாப்பான அணுகுமுறையாகும்",

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

பின்வரும் அட்டவணை பினாங்குத் தீவில் உள்ள இரண்டு அணைகளின் நிலையை சுருக்கமாகக் கூறுகிறது:

| | பயன்பாட்டு கொள்ளளவு | | |
|---|---|---|---|
| | 1.1.2023 | **19.5.2023** | 1.1.2023 முதல் % குறைப்பு |
| ஆயர் ஈத்தாம் அணை | 82.5% | **41.5%** | 41% |
| தெலுக் பஹாங் அணை | 64.0% | **45.7%** | 18.3% |

2,160 மில்லியன் லிட்டர் (ML) கொள்ளளவு கொண்ட ஆயர் ஈத்தாம் அணை, தெலுக் பஹாங் அணையை (18,240ML) காட்டிலும் விட சிறிய அணையாகும். அதன் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இல்லாவிட்டால், ஆயர் ஈத்தாம் அணையின் கொள்ளளவு தெலுக் பஹாங் அணையை விட விரைவாகக் குறைந்துவிடும்.

அதே நேரத்தில், ஆயர் ஈத்தாம் அணையில் எஞ்சியிருக்கும் மூல நீர் இருப்பு "பாதுகாப்பாக" இருப்பதை உறுதி செய்வதே PBAPPக்கு முதன்மையான பணியாகும்.

விநியோகம்: ஆயர் ஈத்தாம் அணையை "பாதுகாப்பதில்" PBAPP-இன் நடவடிக்கைகள்

வறண்ட வானிலை நீர் விநியோக பொறியியல் கட்டுப்பாடுகள் ஆயர் ஈத்தாமில் 1.1.2023 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த ஆண்டு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் வழக்கத்திற்கு மாறாக குறைந்த மழைப்பொழிவு காரணமாக PBAPP தற்செயல் நடவடிக்கைகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

2023,மே முதல், PBAPP பின்வரும் நடவடிக்கைகளை செயல்படுத்தியுள்ளது:

- தினசரி நீர் வெளியீடுகளை 15 MLD ஆக கட்டுப்படுத்தல்;

- ஆயர் ஈத்தாம் நீர் சுத்திகரிப்பு ஆலையில் (WTP) நீர் உற்பத்திக்கு துணைபுரிவதற்காக பினாங்கு மலையடிவாரத்தில் உள்ள பிரதான Main Intake மற்றும் Tat's Intake ஆகியவற்றிலிருந்து மூல நீரை எடுத்தல். இந்த இரண்டு கூடுதல் மூல நீர் ஆதாரங்களில் இருந்து அதிக அளவு நீரைப் பெறும்போது, இது அணையில் இருந்து வரும் மூல நீரைச் சார்ந்திருப்பதைக் குறைக்கிறது;

- செபராங் பிறையில் உள்ள சுங்கை டுவாWTP இருந்து அதிகமான நீரை ஆயர் ஈத்தாம் பகுதியைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு வழங்குவதற்காக அதிக நீரை விநியோகித்தல். இந்த நடவடிக்கை ஆயர் ஈத்தாம் அணையின் சேவை அல்லது விநியோகப் பகுதியை சாதாரண நிலையில் உள்ள 29,000 வளாகங்களுடன் ஒப்பிடும் போது, 6,000 நீர் பயனீட்டாளர்களை மட்டுமே உள்ளடக்கும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது; மற்றும்

- ஆயர் ஈத்தாம் அணையின் சேவைப் பகுதிக்குள் குழாய்கள் வெடிப்பு அல்லது கசிவு பற்றிய அறிக்கைகளுக்கு உடனடியாகப் பதிலளித்தல்.

ஆயர் ஈத்தாம்-ஐ நிர்வகிப்பதில் PBAPP "தற்செயல் அணுகுமுறையில்" இருந்து "கடுமையான அணுகுமுறையை" அமல்படுத்த இணக்கம் கொண்டுள்ளது. இருப்பினும், மிகவும் கடுமையான பொறியியல் நடவடிக்கைகள் நீர் விநியோகத்தில் தடைகளை ஏற்படுத்தலாம். PBAPP, ஆயர் ஈத்தாமில் உள்ள பயனீட்டாளருக்குச் சிரமத்தை ஏற்படுத்த விரும்பவில்லை, அதை செய்ய அவசியமும் இல்லை.

<u>கோரிக்கை: ஆயர் ஈத்தாம் நீர் பயனீட்டாளர்கள் "போராட்டத்தில்" இணைய வேண்டும்</u>

PBAPP முக்கிய நீர் விநியோக பொறியியல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் அதே வேளையில் ஆயர் ஈத்தாமில் உள்ள அனைத்து நீர் பயனீட்டாளர்களும் நீர் தேவையைக் குறைக்க அவசர ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

இந்த நேரத்தில், ஒவ்வொரு ஆயர் ஈத்தாம் நீர் பயனீட்டாளர்கள் கீழ்க்காணும் 2 பரிந்துரைகளுக்கு இடையே ஒன்றைத் தேர்வுச் செய்யலாம்:

- முதலாவது பரிந்துரை, இதனை எளிதாக எடுத்துக்கொள்வது, அக்கறையின்றி நீரைத் தொடர்ந்து பயன்படுத்துவது மற்றும் நல்லது நடக்கும் என எதிர்ப்பார்த்தல்.

- இரண்டாவது பரிந்துரை, ஒவ்வொரு நாளும் குறைந்த நீரைப் பயன்படுத்துவதன் மூலம், முடிந்தவரை ஆயர் ஈத்தாம் அணையின் பயனுள்ள கொள்ளளவை "பாதுகாக்க" போராடுவதில் PBAPP உடன் இணைவதாகும்.

ஆயர் ஈத்தாமின் பெரும்பாலான நீர் பயனீட்டாளர்கள் இரண்டாவது பரிந்துரையைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று PBAPP நம்பிக்கைக் கொள்கிறது. இந்தப் பரிந்துரையைத் தேர்தெடுப்பவர்கள் www.pba.com.my அகப்பக்கத்தில் நீர் சேமிப்புக் குறிப்புகளைக் காணலாம்.

இதற்கிடையில், PBAPP, 2023 இல் ஆயர் ஈத்தாமில் நீர் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கானப் போராட்டத்தைக் கைவிடாது.

நன்றி.

---

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் :syarifah@pba.com.my